# தற்போதைய சூழலில் தமிழ் மொழியின் இருப்பும் எதிர்காலமும்: ஒரு மொழியியல் நோக்கு

**சி.விஜிதா**

Sri Lanka Foundation Institute, Sri Lanka
vijithaslfi@gmail.com

**சுருக்கம்:** இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவி வந்த உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து, தற்போதைய மரபு மாற்றங்களினாலும் மொழிக் கலப்பினாலும் தமிழ் மொழியின் இருப்பையும் எதிர்கால நிலையையும் மொழியியல் ரீதியில் நோக்குவதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து இரண்டாம் மொழி நிலையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் தனியார் வகுப்புகள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை அதிகரித்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. மொழி கற்றல் - கற்பித்தல் ஊடாகப் பரஸ்பர புரிந்துணர்வையும், சமூக ஒருமைப்பாட்டையும், சமூகத்தொடர்பாடலையும், நேரிடைச் சிந்தனையையும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையில் அரசு மொழிக் கல்வியையை அமுலாக்கியுள்ளது. குறிப்பாக சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட சிங்கள மக்கள் தற்போது தமிழ் மொழியை இரண்டாவது மொழியாகக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தற்போதைய சூழலில் தமிழ் ஒரு பல்லின மொழியாக மாறியுள்ளது என்பதும் தமிழ் மொழிக்குரிய தனித்துவம், அடையாளம், செம்மொழிவாதம் ஆகியன பற்றி நோக்காமல் 'தொடர்பாடலை மையப்படுத்திய மொழிப் பிரயோகம்' என்ற நிலையில் தமிழ் மொழி விளங்குகின்றது என்பதையும் அவதானிக்க முடிகின்றது. ஊடகங்களில் தமிழ் மொழியுடன் கலந்து ஆங்கில மொழிப் பிரயோகத்தினால் 'தமிழிஷ்' (Tamilish) என்ற புதிய வழக்கும் அவ்வாறே சிங்கள மொழி கலந்து பேசும் 'சிங்களத் தமிழ்' என்ற புதிய வழக்கும் நிலவுவதனால் தமிழானது மொழிக்கலப்பிற்கு அதிகளவில் உட்படுத்தப்படுகின்றது. சிங்கள, தமிழ் மக்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளும் போது அவர்களுடைய பேச்சு மொழிகளில் ஏற்படும் மாற்றங்களினால் தமிழ் மொழியில் தற்போது அதிகளவில் சிங்கள மொழிச் சொற்கள் கலந்துள்ளன மட்டுமன்றி, இலக்கணம் மற்றும் மொழியில் ரீதியாகவும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதனை பேச்சு வழக்கிலும் ஊடகங்களிலும் அவதானிக்க முடிகின்றது. பல்லின சமூகத்தில் தமிழின் மதிப்பும் செல்வாக்கும் பற்றி எடுத்துக்காட்டி, தமிழின் இருப்பையும் எதிர்காலத்தையும் குறித்து மொழியியல் ரீதியாக ஆராய்தல், இரண்டாம் மொழி நிலையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், அவற்றின் இயங்குதளம் பற்றியும் தமிழ் மொழி எதிர்நோக்கும் சவால்களும் பிரச்சினைகளும் பற்றி விபரித்தல், தமிழ் மொழியின் தனித்துவம், பண்பாட்டு அடையாளங்களும் அம்சங்களும் கற்றல் - கற்பித்தல் மூலம் கடத்தப்படும் விதம், தமிழ் மொழி பற்றிய கருத்தியல்களும் மரபு மாற்றங்களும், தற்காலத்தில் இவற்றின் பொருத்தப்பாடுகளும் வலுவுடைமைகளும் பற்றி விளக்குதல் என்பன நோக்கங்களாகும். தற்கால சூழலில் 'தமிழ் ஒரு பல்லின மொழி' என்ற கருத்தியல் சிந்தனைப்புலத்தில் பிறமொழிக் கலப்பிற்குட்பட்டு மொழியின் தனித்துவத்தை இழக்கின்றதா? என்பதும் எதிர்காலத்தில் மொழி வழக்கு என்ற நிலையில் பிரதேச, சமூகக் கிளை மொழிகள் வழக்கிலிருந்து விடுபட்டு பொதுத்தராதர மொழிவழக்கு நடைமுறையிருத்தல் பற்றியும் மக்களின் வாழ்க்கை முறைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு பொருள்களைக் குறிக்கும் சொற்கள் குன்றியும் திரிந்தும் விரிந்தும் வழங்குகின்ற போது தமிழ் மொழியில் பெருவழக்குப் பெற்ற சொற்கள் வழக்கிழந்து போகும் நிலையில் உள்ளனவா? என்பதும் இலக்கிய மரபு, எழுத்து வழக்கு என்பவற்றிலிருந்து தமிழ் மொழி பேச்சு வழக்கை அதிகளவில் ஒட்டியதாக விளங்குதல் என்பதும் ஆய்வின் பிரச்சினைகளாகும். கள ஆய்வு மற்றும் பேட்டி மூலம் திரட்டிப் பெறப்பட்ட தரவுகள் முதனிலைத் தரவுகளாகவும் மொழியியல், தமிழ் மொழி தொடர்பான பிரதிகளை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தி, அவற்றை அவற்றின் வெளிப்பாட்டு முறையில் சூழமைவுபடுத்திப் பார்த்துப் பெறப்படும் தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய தரவுகளை விபரண, மொழியியல் மற்றும் சமூகவியல் அணுகுமுறை மூலம் ஆராயப்படுகின்றன.